# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

4

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

தரம் 10

### கணக்கியல் அடிப்படைகள்

1) கணக்கியலின் பிரதான நோக்கம் என்ன?

i. ஒரு வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை மற்றும் நிகழ்வுகளை பதிவு செய்தல்.
ii. வணிக கொடுக்கல் வாங்கல்களை முதன்மை ஏடுகளில் பதிவு செய்தல்
iii. அக்கறையுள்ள தரப்பினருக்கு தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கல்.
iv. வணிகம் தொடர்பான விடயங்களை முகாமைத்துவத்திற்கு சமர்ப்பளித்தல்.

2) வணிகத்தில் அக்கறையுள்ள பிரிவினர் என்பதால் கருதப்படுவது யாது?

i. வணிகத் தகவல்களில் ஆர்வமுள்ள பிரிவினர்கள்.
ii. வணிகத்தின் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்கள்.
iii. வணிகத்திற்கு மூலதனம் வழங்கும் பிரிவுகள்.
iv. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வணிகத்திற்கு கடன் வழங்க ஆர்வமாக உள்ளன.

3) வணிகததில் அக்கறை செலுத்தும் அகச்சூழல் காரணிகள்,

i. உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள்.
ii. உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள்.
iii. வாடிக்கையாளர்கள் மற்றும் வழஙகுணர்கள்.
iv. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்.

4) வணிகத்தின் தகவல்களை அக்கறையுள்ள பிரிவினருக்கு அனுப்பும் முறை?

i. பல்வேறு கணக்குகளால்
ii. காசு கணக்கின் மூலம்
iii. நிதி அறிக்கைகள் மூலம்
iv. நிதி நிலைமைக் கூற்றின் மூலம்

5) பின்வருவனவற்றில் எது வணிக கொக்கல் வாங்கலாக கருதப்படுகிறது?

i. வணிக நிலையம் நகரத்திலிருந்து 1 கி.மீ.துரரத்தில் அமைந்துள்ளது
ii. வணிகத்தில் இரண்டு புதிய பணியாளர்கள் ஆட்சேர்த்தல்.
iii. வணிகத்தின் மின்கட்டணம் ரூ.5000 செலுத்துதல்.
iv. ஒரு நகரத்தில் வணிகத்தின் புதிய கிளை ஒன்றினைத் திறத்தல்.

6) பின்வரும் தகவல்களின் அடிப்படையில் நிகழ்வாக கருதப்படக்கூடியது எது?

i. வியாபார கடன்படுனரின் ஒரு பகுதி அறவிட முடியாக்கடனாக பதிவழிக்கப்படல்
ii. பொருட்களின் காசுக்கு விற்பனை
iii. வணிகத்தின் கட்டிட வாடகை வழங்கப்படல்
iv. உரிமையாளரினால் மேலதிக மூலதனம் உறுதிப்படுத்தப்படல்

Commerce and Business Studies Branch

7) சொத்துக்களின் பிரதான பண்பாக கருதப்படக்கூடியது,

i. வணிகத்தினால் எதிர்காலத்தில் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
ii. கடந்த கால கொடுக்கல் வாங்கலின் விளைவாக உருவானது.
iii. வியாபாரத்தினால் கட்டுப்படுத்த இயலாது.
iv. வணிகத்தினால் பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்க முடியாது.

8) பின்வருவனவற்றுள் வணிகத்தின் நடைமுறைச் சொத்ததாக கருதப்படக் கூடியது,

i. தளபாடங்கள்
ii. நிலங்கள்
iii. கட்டிடங்கள்
iv. சரக்கிருப்பு

9) பின்வருவனவற்றுள் வணிகத்தின் நடைமுறை அல்லாத சொத்ததாக கருதப்படக் கூடியது,

i. பணம்
ii. நிலங்கள்
iii. சரக்கிருப்பு
iv. கடன்பட்டோர்

10) வணிகப் பொறுப்புக்களின் பிரதான பண்பாக கருதப்படுவது,

i. பொருளாதார நலன்கள் வணிகத்திற்கு உட்பாய்ச்சப்படல்.
ii. பொருளாதார நலன்கள் வணிகத்திற்கு வெளிச்செல்லல்.
iii. வணிகத்தினால் கட்டுப்படுத்த முடியும்.
iv. எதிர்காலத்தில் நடக்கக்கூடிய ஒன்று.

11) பின்வருவனவற்றுள் வணிகத்தின் நடைமுறைச் பொறுப்பாக கருதப்படக் கூடியது,

i. கையிலுள்ள காசு
ii. வியாபார கடன் கொடுத்தவர்கள்
iii. சரக்கிருப்பு
iv. வங்கி கடன்

12) பின்வருவனவற்றுள் வணிகத்தின் நடைமுறையல்லாத பொறுப்பாக கருதப்படக் கூடியது,

i. நீண்ட கால வங்கி கடன்கள்
ii. குறுகிய கால வங்கி கடன்கள்
iii. வங்கி மேலதிகப்பற்று
iv. வியாபார கடன் கொடுத்தவர்கள்

13) வணிகத்தின் உரிமையாக கருதப்படுவது,

i. உரிமையாளரின் வெளிப்புற பொறுப்பு.
ii. உரிமையாளர் சார்பாக காணப்படும் சொத்துகளின் அளவு.
iii. உரிமையாளர்கள் சார்பாக இருக்கும் பொறுப்பு அளவு.
iv. வங்கியில் இருந்து உரிமையாளர் பெற்ற கடன் தொகை.

Commerce and Business Studies Branch

14) ஹஸாராவின் வியாபாரத்தில் ரூ.300,000 வங்கிக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. வணிகத்தில் காணப்படும் மொத்த சொத்துக்கள் ரூ.520,000. வணிகத்தின் உரிமை யாது?

i. ரூ.120,000
ii. ரூ.220,000
iii. ரூ.200,000
iv. ரூ.520,000

15) ஒரு வணிகத்தின் லாபமாக கருதப்படுவது,

i. வருமானங்களினதும் செலவுகளினதும் கூட்டுத்தொகை.
ii. வருமானத்திற்கும் செலவிற்கும் உள்ள வேறுபாடு.
iii. வருமானம் மற்றும் சொத்துக்கும் இடையிவான வேறுபாடு.
iv. உரிமைக்கும் சொத்துக்கும் உள்ள வேறுபாடு

16) ஒரு வணிகத்தின் லாபம் அல்லது வருமானத்தை அதிகரிக்கும் கொடுக்கல் வாங்கலாக அமைவது,

i. உரிமையாளரின் பற்று
ii. காசுக்கு கொள்வனவு
iii. காசுக்கு விற்பனை
iv. பெற்ற வங்கிக் கடன்

17) வணிகத்தின் பற்று என்பதால் கருதப்படுவது,

i. உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மேலதிக மூலதனம்.
ii. வாடிக்கையாளர்களுக்கு பணம் செலுத்துதல்.
iii. உரிமையாளரினால் ஏற்படுத்தப்படும் சொத்துக்களின் குறைவு.
iv. வணிகத்தின் செலவுகளை செலுத்தப்படல்

18) மளிகைக் கடை நடத்தும் துவிந்து சாமோத் பின்வரும் தகவல்களை உங்களுக்கு வழங்கியுள்ளார். சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் என வகைப்படுத்தப்படுத்திக் காட்டு. (உரிய இடத்தில் √ அடையாளமிடுக)

| பொருள் | சொத்து | பொறுப்புகள் | வருமானம் | செலவு |
|---|---|---|---|---|
| காசு | | | | |
| வங்கி கடன் | | | | |
| கடன் பட்டோர் | | | | |
| விற்பனை | | | | |
| இருப்பு | | | | |
| மின் கட்டணம் | | | | |
| கடன் வட்டி | | | | |

Commerce and Business Studies Branch

| | | | | |
|---|---|---|---|---|
| காணி | | | | |
| கொடுக்க வேண்டிய சம்பளம் | | | | |
| பெற்ற வட்டி | | | | |
| கொடுத்த வட்டி | | | | |
| மோட்டார் வாகனம் | | | | |
| தளபாடம் | | | | |
| கடன் கொடுத்தோர் | | | | |
| வங்கி மீதி | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | | | | |

19.

ஹசாரா வித்யானி ஆடை தொழிற்சாலையை நடத்தி வருகிறார். அவரது வியாபாரம் தொடர்பான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. (உரிய இடத்தில் √ அடையாளமிடுக)

| **விடயம்** | **சொத்துக்கள்** | | **பொறுப்புக்கள்** | |
|---|---|---|---|---|
| | **நடைமுறை** | **நடைமுறையற்றது** | **நடைமுறை** | **நடைமுறையற்றது** |
| வங்கி கடன் | | | | |
| தைத்த ஆடைகள் | | | | |
| தையல் இயந்திரங்கள் | | | | |
| கையிலுள்ள காசு | | | | |
| கட்டிடம் | | | | |
| செலுத்த வேண்டிய மின் கட்டணம் | | | | |
| விநியோக வான் | | | | |
| கடனுக்கு விற்பனை செய்த தைத்த ஆடைகள் | | | | |
| கடனுக்கு கொள்வனவு செய்த ஆடைகள் | | | | |
| இருப்புக்கள் | | | | |

Commerce and Business Studies Branch

20. கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் கொடுக்கல் வாங்கல்களா நிகழ்வுகளா என வகைப்படுத்திக் காட்டுக. (உரிய இடத்தில் √ அடையாளமிடுக)

| **கொடுக்கல் வாங்கல்/ நடவடிக்கை** | **வகைப்படுத்தல்** | |
|---|---|---|
| | **கொடுக்கல் வாங்கல்** | **நடவடிக்கை** |
| காசுக்கு விற்பனை ரூ. 500 000 | | |
| மோட்டார் வாகன தேய்வு ரூ. 20 000 | | |
| அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு ரூ. 10 000 | | |
| காசுக்கு கொள்வனவு ரூ. 200 000 | | |
| செலுத்திய மின் கட்டணம் ரூ. 5 000 | | |

Commerce and Business Studies Branch